புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 13, 2024 • புரட்சி 24 • முழக்கம் 36 • விலை ரூ.3.00




### சேலத்தில் தலைவர், சென்னையில் பொதுச்செயலாளர் பங்கேற்பு

## கல்வி உரிமைகளைப் பறிக்கும் பாஜகவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



**சேலம் :** "மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்!" என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற, பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் - கழக இளைஞரணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 10.09.2024 அன்று சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.

சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெற்றிமுருகன் வரவேற்புரையாற்றினார். சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.தங்கதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் ஏற்காடு தேவபிரகாசு, சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கொளத்தூர் சுதா, சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சட்டக் கல்லூரி மாணவர் செல்வகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரையாற்றினார்.

சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூறினார்.

இதில் சேலம் (கி) மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், ஆத்தூர் மகேந்திரன், சேலம் தமிழரசன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் இளம்பிள்ளை திவ்யா, சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெள்ளார் சிவசண்முகம், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திவாகர், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் கவியரசு மற்றும் 100க்கும் மேற்பட்ட தோழர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை:** "மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்!" என்ற முழக்கத்துடன் "தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற, பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் - கழக இளைஞரணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 10.09.2024 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில்:- **தமிழ்நாட்டில் கல்விக் கட்டமைப்பு என்பது மிகவும் வலுவான ஒன்றாக திகழ்கிறது. இதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தப்பட்டுள்ளது. புதிய கல்விக் கொள்கையில் ஒன்றிய அரசு 2035-ம் ஆண்டுக்குள் இந்தியாவின் GER-ஐ 50% ஆக உயர்த்த வேண்டும் என இலக்கு நிர்ணயித்திருக்கிறது. ஆனால் தமிழ்நாடு**



**2021ஆம் ஆண்டிலேயே 51.4 சதவீதத்தை அடைந்துவிட்டது. ஏற்கனவே நாங்கள் அடைந்துவிட்ட ஒரு இலக்கை, 20235 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதத்தை எட்ட வேண்டும் என்று நிர்ணியித்த புதிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்க வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம்.** இவ்வாறு அவர் பேசினார்.

இது ஒட்டுமொத்த இந்தியாவின் GER அளவை விடக் கிட்டத்தட்ட 2 மடங்கு அதிகம்.. சிறப்பாக தமிழ்நாடு மாணவர் கழகச் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு வரவேற்புரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கல்வியாளர் பிரின்சு கஜேந்திரபாபு, இந்திய மாணவர் சங்க தமிழ்நாடு மாநிலக் குழுத் தலைவர் சம்சீர் அகமது, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற தமிழ்நாடு மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் சினேகா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாகச் சென்னை மாவட்டக் கழக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜெயப்பிரகாசு நன்றி கூறினார்.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, வட சென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், துணைச் செயலாளர் அ.வ.வேலு, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் மற்றும் ஏராளமான சட்டக்கல்லூரி மாணவர்கள் - இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

## புதிய கல்விக்கொள்கை - பாஜக பதில் சொல்லுமா?

ர.பிரகாசு

கல்வித் தரத்தில் இந்தியாவில் உயர்ந்து நிற்கும் கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், பஞ்சாப் மற்றும் டெல்லி ஆகிய 5 மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி தர மறுப்பதாக தி இந்து பத்திரிகையில் செப்டம்பர் 9ஆம் தேதி ஆதாரத்துடன் செய்தி வெளியாகியிருந்தது. அந்த செய்தியை தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பகிர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "புதிய கல்விக்கொள்கையை ஏற்க மறுப்பதால் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் தண்டனை. ஒன்றிய பாஜக அரசு தரமான கல்வி மற்றும் சமத்துவத்தை ஊக்குவிப்பது இப்படித்தானா? இதை முடிவு செய்ய நம் தேசம் மற்றும் நம் மக்களின் அறிவுக்கே விட்டுவிடுகிறேன்" என்று காட்டமாகப் பதிவிட்டிருந்தார்.

ஒன்றிய அரசு நியாயமாக நடந்துகொள்வதென்றால் நிலுவை நிதியை விடுவித்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானோ, முதலமைச்சரின் பதிவைப் பகிர்ந்து சில அபத்தமான கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

புதிய கல்விக்கொள்கையை எதிர்ப்ப தென்றால்,

1. தமிழ் உள்ளிட்ட தாய்மொழிக் கல்வியை எதிர்க்கிறீர்களா?

2.தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் தேர்வு நடத்துவதை எதிர்க்கிறீர்களா?

3.தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் பாடத்திட்டங்களை உருவாக்குவதை எதிர்க்கிறீர்களா?

4. முழுமையான, சமத்துவமான, ஒழுங்குபடுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தை எதிர்க்கிறீர்களா?

என்ற அவர் எழுப்பியிருக்கும் கேள்விகள் முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்வது போன்ற முட்டாள்தனமானவை.

புதிய கல்விக்கொள்கை மும்மொழித் திட்டத்தை வலியுறுத்துகிறது. உள்ளூர் தொடர்புக்கு தாய்மொழி, உலகத்தொடர்புக்கு ஆங்கிலம் இருக்கும்போது, மூன்றாவதாக ஒரு மொழியை வலிந்து கற்க வேண்டிய அவசியம் எங்கிருந்து வருகிறது? அது மாணவர்களின் விருப்பத் தேர்வு என்றால், ஒரு பள்ளியில் - ஒரே வகுப்பில் சில மாணவர்கள் பீகாரியும், சில மாணவர்கள் குஜராத்தியும், சில மாணவர்கள் மராட்டியும், சில மாணவர்கள் கன்னடமும், சில மாணவர்கள் மலையாளமும், சில மாணவர்கள் தெலுங்கும், சில மாணவர்கள் இந்தியும் கற்க விரும்பினால் அதற்குரிய தனித்தனி ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவது நடைமுறைச் சாத்தியம்தானா?

மூன்றாவது மொழிக்கு இந்தியா முழுமையும் இந்தி ஆசிரியர்கள் மட்டுமே அதிகம் இருக்கிறார்கள். அதனால் இந்தி ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட வாய்ப்பும், நடைமுறைச்


தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## தலையங்கம்

# எது ஆன்மீகம்?

“பூர்வ ஜென்மப் பாவம்தான் இப்போது ஊனமாகப் பிறப்பதற்குக் காரணம். பாவங்களுக்கு நரகமும் புண்ணியங்களுக்கு மோட்சமும் தான் கிடைக்கும்” என்று பேசுவது தான் ஆன்மீகமா? பள்ளி மாணவர்களிடையே இந்தக் கருத்தை விதைக்கலாமா? சென்னையில் இரண்டு அரசுப் பள்ளிகளில் கல்வி அதிகாரிகளின் ஒப்புதலோடு மகா விஷ்ணு என்ற ஆன்மீகவாதி இப்படிப் பேசியிருப்பது சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது. செய்தி வெளிவந்தவுடனேயே தமிழ்நாட்டில் கட்சிகளைக் கடந்து வந்த எதிர்ப்புகளை வரவேற்க வேண்டும். இதனால் தான் தமிழ்நாட்டை “பெரியார் மண்” என்று கூறுகிறோம். இந்தப் பேட்டி ஆன்மீகம் தான் என்ற குரல் தமிழ்நாடு பாஜகவினரிடமிருந்து மட்டுமே கேட்கிறது. உடல் ஊனம் பூர்வ ஜென்மப் பாவமே என்ற வாதத்தை அப்படியே நீட்சியாக்கித் தீண்டாமை எனும் சமூக ஊனம். பூர்வ ஜென்மப் பயன் என்று பேசினாலும் வியப்பதற்கு இல்லை.

எந்த முதலீடும் இல்லாமல் விரக்தி, குழப்பம் மற்றும் மூடநம்பிக்கைகளை மட்டுமே மூலதனமாகக் கொண்டு ஆன்மீக வணிகம் பல கோடிகளில் புரள்கிறது. ஆன்மீகம் என்ற பெயரில் இப்போது நடக்கும் பேச்சுக் கச்சேரிகள் மக்களின் சிந்தனைகளைக் குழப்புவதோடு அவர்கள் அறிவியல் பாதை நோக்கித் திரும்பவிடாமல் தடுப்பதற்கும் பயன்பட்டு வருகின்றன.

ஆன்மீகம் தனிநபர் சார்ந்தது. அது சமூகம் சார்ந்தது அல்ல. வெறுப்பு மற்றும் தன் முனைப்புகளிலிருந்து விடுவித்து சமூகத்தில் ஒற்றுமையையும், சமத்துவ உணர்வையும் வளர்ப்பதற்கு இந்த ஆன்மீகப் பேச்சுக்கள் பயன்படுகிறதா? என்றால் நிச்சயம் இல்லை. எந்த ஆன்மீகவாதியாவது ஜாதி, தீண்டாமை, பெண்ணடிமைச் சிந்தனைகளை எதிர்த்துப் பேசியிருக்கிறார்களா? இல்லவே இல்லை. ஆன்மீகத்தை நமது உள்ளத்தில் தான் தேட வேண்டும். அது புற உலகில் இருந்து வருவதில்லை என்றுதான் எல்லா ஆன்மீகவாதிகளும் பேசுகிறார்கள். ஆனால் ஆன்மீக குருஜீக்கள் புற உலக வாழ்க்கையைத் தேடி ஓடுகிறார்கள். சொத்து, குடும்பங்களிலிருந்து விடுவித்துக்கொண்டு துறவியாகி ஆன்மீகம் பேசுவது என்ற நிலை மாறி இப்போது சொகுசு வாழ்க்கை, கார்ப்பரேட் வணிகம், உல்லாச பங்களா, விமானப் பயணம் என்பதே இப்போது வாழ்க்கையாகிவிட்டது.

மறுபிறவி, ஆன்மா என்ற கற்பனைகளை எதிர்த்துப் பெரியார் இயக்கம் மட்டும்தான் தமிழ்நாட்டில் பேசியது. மக்களிடம் எதிர்நீச்சல் போட்டுப் பரப்புரை செய்தது. “ஆத்மா, மோட்சம், நரகம் இவைகளைக் கற்பித்தவன் அயோக்கியன்” என்ற வாசகங்களை அட்டையில் அச்சிட்டு மக்களிடையே பரப்பச்சொன்னவர் பெரியார். அப்போது பெரியாருக்கும் பெரியார் தொண்டர்களுக்கும் ‘இந்துமத விரோதி’ என்ற முத்திரைக் குத்தப்பட்டது. எதிர்ப்புகள் எழுந்தன. இப்போது மகாவிஷ்ணு என்ற பிரச்சாரகர் மறுஜென்மம், ஆத்மா பற்றி பேசியதை மூடநம்பிக்கைப் பிரச்சாரம் என்று ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் கூறுகின்றனர். அறிவியல் சமூக வளர்ச்சிப்போக்கில் கொண்டுவந்த மாற்றங்களே இதற்கு அடிப்படையான காரணம். மாற்றம் இப்படித்தான் நிகழும்.

திருக்குறள் தமிழர்களுக்கான நூல் என்று அடையாளப்படுத்தி “திருக்குறள்” மாநாட்டை நடத்தியவர் பெரியார். குறைந்த விலையில் திருக்குறளை அச்சிட்டுப் பரப்பினார். அதே நேரத்தில் திருக்குறளில் உள்ள பெண்ணடிமை, ஊழ்வினைக் கருத்துக்களை ஏற்க முடியாது என்றும் கூறினார். உடனே பெரியார்; தமிழுக்கு எதிரி என்றார்கள். இப்போது மகா விஷ்ணு திருக்குறளில் ஊழ்வினை அதிகாரத்தைத்தான் எடுத்துக்காட்டிப் பேசினேன் என்று கூறுகிறார். தான் பேசிய முன்ஜென்மக் கருத்துக்கள்தான் ஊழ்வினை அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது என்கிறார். ஊழ்வினை அதிகாரத்தைதான் பேச வேண்டுமா? காமத்துப்பாலை மாணவர்களிடையே பேச முடியுமா? என்ற எதிர் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆக திருக்குறளில் ஏற்கவியலாத கருத்துக்களும் உண்டு என்ற முடிவுக்குத்தான் வந்து சேர வேண்டி இருக்கிறது. இதைத்தான் பெரியார் அப்போதே சுட்டிக்காட்டினார்.

ஆத்மா, மோட்சம் என்ற கருத்துக்களுக்கான மறுப்பு தமிழ் இலக்கியங்களிலேயே காணப்படுகிறது. தமிழ் அறிஞர்கள் இதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டுகிறார்கள். சமண இலக்கியமான மணிமேகலை காப்பியத்தில் சமயக் கணக்கர் தம் திறம் கேட்டக் காதை என்ற பகுதி ஊதவாகம் என்ற கருத்தை முன்வைக்கிறது. இது நாத்திக வாதமாகவே இருக்கிறது. மனித உடல்களைக் கடந்த ஆன்மா மற்றும் உயிர் என்பவை ஏதும் இல்லை. உடலில் உள்ள உறுப்புகளின் சேர்க்கை வழியாக வருவதுதான் உயிர் மற்றும் உணர்வு என்ற பூதவாதம் வாதிடுகிறது. பொருள்களே சிந்தனை உணர்வுகளுக்கு அடித்தளம் என்ற பொருள்முதல்வாதக் கருத்தையே பூதவாதம் பேசுகிறது. மற்றொரு தத்துவ சமண இலக்கியமான நீலகேசி வேதம், மோட்சம், ஆன்மாவைக் கேள்வி கேட்கிறது. அதில் பூதவாதி வருவார். விளக்கில் எரியும் நெருப்பை உதாரணமாகக் காட்டுகிறார். விளக்கு எண்ணெய் திரி என்ற மூன்றும் சேர்ந்தால்தான் நெருப்பு என்ற தீ வரும். இவற்றில் ஏதேனும் ஒன்று இயங்காவிட்டால் தீ இல்லை. எனவே ‘தீ’க்கு தெய்வீக முலாம் பூசக்கூடாது, அது பொருள்களின் சேர்க்கை என்று வாதிட்டார். அப்போது வைதீகம் தனது மறுப்பாக இந்தச் சடப்பொருள்களை சேர்த்து வைப்பதற்கு இந்தக் கடவுள்தான் தேவைப்படுகிறார் என்று கூறியபோது பூதவாதி அதையும் மறுத்தார். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலத்திலும் இதே போன்றுதான் சடப்பொருள்களோடு நெருப்பு எரியும் எனவே இவை நிலையானது. அதே போல் இந்தப் பிரபஞ்சம் நிலையானது. அதற்கு தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை இதை இயக்க கடவுள் சக்தி என்ற ஒன்று வெளியே இருந்து வரத்தேவையே இல்லை என்று பதிலளித்தார். “சென்ற காலத்துக்கும் / செல்கின்ற காலத்துக்கும் / நின்ற காலத்திலும் இந்நிகழ்ச்சியே என்று இவ்வுலகு இத்தன்மைத்தே இது அன்று அது என்று உறைப்பார் அயர்ப்பார்களே” என்று நீலகேசி கூறுகிறார். இப்போதும் கம்ப்யூட்டர் உயிர்த்துடிப்புடன் நம் ஆணையை ஏற்று இயங்குகிறது. அதை விரித்துப்பார்த்தால் உள்ளே கம்பிகளும் வயர்களுமாகத்தான் இருக்கும். உயிர் என்ற பொருள் ஏதும் இருக்காது. உள்ளம், உணர்வு, உயிர் என்பவைகளுக்கு அடித்தளம் பொருள்களே என்று அறிவியல் நிறுவிய பிறகும் பார்ப்பனியம் தனது சமூக ஆதிக்கப் பிடியில் மக்களைப் பிடித்து வைப்பதற்கு ஆன்மீகம் என்ற புதிய மோசடியைக் கையில் எடுத்துள்ளது.

தமிழக அரசு உடனடியாக எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் பள்ளிக்கல்வித்துறை தொடர்ந்து தடுமாற்றத்தில் செயல்பட்டு வருவதை நாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம். இதற்கு பல்வேறுச் சான்றுகளைக் கூறமுடியும். அமெரிக்காவிலிருந்து இதற்கு தமிழ்நாடு முதல்வர் உடனடியாக எதிர்வினையாற்றியிருப்பது பாராட்டுக்குரியது. இனியாவது பள்ளிக்கல்லூரிகளில் அறிவியல் கருத்துக்களைப் பரப்புவதோடு அதற்கு தடையாக நிற்கும் மூடநம்பிக்கை – ஆன்மீகம் என்ற பெயரில் பரப்பப்படும் பழமைவாதக் கருத்துக்களுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

முதல் பக்கத் தொடர்ச்சி

சாத்தியமும் உள்ளது. எனவே இந்தி மட்டுமே மூன்றாவது விருப்ப மொழியாக கட்டாயமாகத் திணிக்கப்படும். அனைவரும் இந்தி படித்துவிட்டால் தாய்மொழிக்குத் தேவை இருக்காது. வடமாநிலங்களில் பல பிராந்திய மொழிகள் இப்படித்தான் அழிக்கப்பட்டு, இந்தி மட்டுமே இன்று பேச்சிலும், எழுத்திலும் புழக்கத்தில் இருக்கிறது. இந்தித் திணிப்பு எதிர்ப்பை நூறாண்டுக்கு முன்பே எச்சரிக்கையோடு எதிர்த்து, விழித்துக்கொண்ட தமிழ்நாட்டிடம் இப்போது தாய்மொழியைக் கற்றுக்கொடுக்கத்தான் புதிய கல்விக்கொள்கை என்று காதில் பூ சுற்றுவதா? அல்லது அதை நம்பி ஏமாறும் அளவுக்கு தமிழ்நாட்டு மக்கள் முட்டாள்களாக இருக்கிறார்கள் என்று பாஜக கருதுகிறதா?

அதுமட்டுமல்ல, தற்போதுள்ள 10, +2 பாடத் திட்ட முறை மாற்றப்பட்டு, 5 + 3 + 3 + 4 ஆண்டு பாடத்திட்ட முறை அறிமுகப்படுத்தப்படும் என்கிறது புதிய கல்விக்கொள்கை. மூன்றாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்துவதும் திட்டம். அதேபோல மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முழுமையாக மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டிய அவசியமும் இல்லை. முதல் ஆண்டில் வெளியேறினால் ஒரு சான்றிதழ், இரண்டாவது ஆண்டில் வெளியேறினால் டிப்ளமோ சான்றிதழ் வழங்கப்படும். இது எதற்காக என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இடைநிற்றலை அதிகரித்து, கல்வியில் இருந்து பிற்படுத்தப்பட்ட- பட்டியல் - பழங்குடி சமூகங்களை வெளியேற்றுவதுதான் இதன் நோக்கம்.

மேலும், உயர்கல்வியில் சமஸ்கிருதம் மாணவர்களின் விருப்பப் பாடமாக இருக்கும் என்றும் புதிய கல்விக்கொள்கை கூறுகிறது. செத்த மொழி சமஸ்கிருதத்தை ஏன், எதற்கு மக்கள் படிக்க வேண்டும்? வருணாசிரம தர்மத்தை நிலைநிறுத்தி, சமூக ஏற்றத்தாழ்வுகளைத் தக்கவைக்கத்தானே? உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தை 2035ஆம் ஆண்டுக்குள் 50 விழுக்காடு அடைவோம் என்பது புதிய கல்விக்கொள்கையின் இலக்கு. இன்னும் 10 ஆண்டுகள் கழித்து இந்தியா அடைய வேண்டிய இலக்கை தமிழ்நாடு எட்டி ஆண்டுகள் பல ஆகிவிட்டன. எனவே தமிழ்நாடு எந்த கல்வி நடைமுறையைப் பின்பற்றுகிறது என்று ஆராய்ந்து, அதைச் செயல்படுத்துவதுதான் அறிவார்ந்த செயலாகும்.

மருத்துவ மற்றும் சட்டப் படிப்புகளைத் தவிர ஒட்டுமொத்த உயர் கல்விக்கும் ஒரே முதன்மை அமைப்பாக இந்திய உயர் கல்வி ஆணையம் அமைக்கப்படும் என்றும் புதிய கல்விக்கொள்கை வரைவறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கல்வி பொதுப்பட்டியலில் இருக்கிறது என்பதை மறந்துவிட்டு, மெல்ல மெல்ல ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் குவிக்கும் ஆபத்தான போக்கு இது. ஏற்கெனவே திணிக்கப்பட்டிருக்கும் ‘நீட்’ போன்ற தகுதித்தேர்வுகளே அதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

கல்வித் துறையில் பொதுமுதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 விழுக்காட்டை விரைவில் எட்ட மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து பணியாற்றும் என்றும் புதிய கல்விக்கொள்கை கூறுகிறது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கல்வித்துறைக்கு ஒட்டுமொத்த பட்ஜெட்டில் 3.16 விழுக்காடு ஒதுக்கப்பட்ட நிலையில், அதை படிப்படியாகக் குறைத்து நடப்பு நிதியாண்டில் 1.53 விழுக்காடாக சுருக்கிவிட்டது ஒன்றிய பாஜக அரசு. ஆக, கல்விக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்று பாஜக அரசு கூறுவதை விட மிகப்பெரிய நகைப்பு வேறெதுவும் இருக்காது.

எனவே தர்மேந்திர பிரதானோ அல்லது வேறு பாஜகவினரோ, எந்த வடிவில் புதிய கல்விக்கொள்கையைத் தூக்கி வந்தாலும் தமிழ்நாடு அதை ஒருபோதும் ஏற்காது. கல்வியில் இருந்து தமிழர்களை விலக்கிவைக்க முயற்சிப்பது, பாஜகவைத் தமிழ்நாட்டு மக்கள் விலக்கி வைத்திருக்கும் அகலத்தை அதிகரிக்கவே பயன்படும் என்பதை உணர வேண்டும்.

## வினா விடை

• போன ஜென்மப் பாவங்களுக்கு கடவுள் இந்த ஜென்மத்தில் தண்டனை தருகிறார். - **மஹா விஷ்ணு**

**அதனால் தான் மஹா விஷ்ணு இப்போது போலீஸ் விசாரணையில் இருக்கிறார்.**

• என் கனவில் சித்தர்கள் சொன்னதைத்தான் நான் பேசினேன். - **மகா விஷ்ணு வாக்குமூலம்!**


**சித்தர்கள் கடவுள், ஆன்மாவை மறுப்பவர்கள் என்பது கூட இந்த அவதாரத்துக்குத் தெரியாது போலும்.**

• நித்தியானந்தாவைப் போல பிரபலமாக ஆசைப்பட்டேன். - **மஹா விஷ்ணு**

**சித்தர்கள் தான் இந்த ஆலோசனையையும் கூறினார்களா?**

• ஆன்மீகவாதியைக் கைது செய்தது தவறு! - **ஒன்றிய அமைச்சர் எல்.முருகன்**

**மோடிக்குச் சிபாரிசு செய்து பாரத ரத்னா வாங்கிக் கொடுத்துருங்க!**



# “யாருடைய தயவுக்கோ, சுயநல வாழ்வுக்கோ ‘குடிஅரசு’ இல்லை”

## பெரியாரின் உருக்கமான கட்டுரை

**சகோதர வாசகர்களே !**

நமது “குடி அரசு” ஆரம்பமாகி இரண்டு வருஷம் முடிந்து மூன்றா வது வருஷத்தின் முதல் இதழ் இன்று வெளியாகிறது. “குடி அரசு” ஆரம்ப இதழில் “குடி அரசு” என்று ஒரு தலையங்கமும், ஆறு மாதம் கழிந்து “நமது பத்திரிகை” என்று ஒரு தலையங்கமும் ஒரு வருஷம் முடிந்து இரண்டாவது வருஷ ஆரம்பத்தில் “நமது பத்திரிகை” என்று ஒரு தலையங்கமும் எழுதி இருக்கிறோம்.

இப்போது இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருஷ ஆரம்ப முதல் இதழிலும் அவ்வாறே “நமது பத்திரிகை” என்று தலையங்கமிட்டு ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம்.

நமது நாட்டு மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டாக்கக் “குடி அரசு” என்னும் ஒரு பத்திரிகை யை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதல் முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளையும் 1922ல் கோயமுத்தூர் ஜெயிலில் சிறைவாசம் செய்யும் போதே நினைத்தோம். அதுபோலவே வெளியில் வந்த கொஞ்ச நாட்களுக்குள் “குடி அரசு” என்று ஒரு வாரப் பத்திரிகையும், “கொங்கு நாடு” என்று ஒரு மாதாந்திரமும் நடத்தப் போவதாய் 19.1.23 தேதியில் சர்க்காரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இவ்விஷயத்தை முதலில் ஸ்ரீமான் திரு. வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்களிடம் சொன்னேன். அவர் எனது கொள்கையை கேட்டவுடன் சந்தோஷப்பட்டு “இப்படி ஒரு பத்திரிகை வேண்டியது தான். அதற்கு நீயே சரியானவன். நீ ஆரம்பித்தால் தமிழ் நாட்டிலேயே பதினாயிரக்கணக்கான சந்தாதாரர்கள் சேருவார்கள். ஆனால் அதிக நாள் நிலைக்காது. ஒரு கூட்டத்தார் எப்படியாவது அதை ஒழித்து விடுவார்கள். ஆனாலும், நடந்த வரை லாபம், நடத்துங்கள்” என்றார். பிறகு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களிடம் சொன்னேன். அவரும் மிகச் சந்தோஷப்பட்டு “சீக்கிரத்தில் வெளியாக்க வேண்டுமென்று விரும்புவதாகவும், வெளியாகத் தாமத மேற்பட்டால் அதுவரை தனது பத்திரிகையில் வேண்டுமானாலும் எழுதி வரும் படியும் சொன்னார்.” பிறகு ஸ்ரீமான் சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்களிடம் சொன்னேன். அவர் “இந்தச் சமயம் இப்படிப்பட்ட பத்திரிகை கூடாது. அல்லாமலும் மகாத்மா ஜெயிலில் இருக்கும்போது இதை விட்டு விட்டு நீ பத்திரிகை நடத்தப் போவது சரியல்ல. உன்னுடைய சேவை இது சமயம் மிகவும் அவசியமானது ஆனதால் கண்டிப்பாய்ப் போகக் கூடாது” என்று சொல்லி விட்டார். அதன் பேரில் அந்த எண்ணத்தை ஒத்தி வைத்து விட்டு மறுபடியும் ஒத்துழையாமைக்காகவே உழைத்தேன். தற்செயலாய் வைக்கம் சத்தியாக்கிரகம் ஏற்பட்டது. ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் அவர்களும் வைக்கத்திலிருந்து “என்னை பிடிக்கப் போகிறார்கள். நான் இதோ ஜெயிலுக்குப் போகிறேன். வேறு யாரும் இல்லை. நீ வந்து ஒப்புக்கொள்” என்று எழுதின கடிதமும் தந்தியும் என்னைக் குடும்பத்துடன் வைக்கத்திற்குப் போகும்படி செய்து விட்டது. அங்கு ஜெயிலில் இருக்கும்போதும் இதே எண்ணம்தான். அதாவது வெளியில் போனதும் பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற ஆவல் அதிகமாயிற்று. அதுபோலவே வெளியில் வந்ததும் பத்திரிகை ஆரம்பிக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கேற்றாற்போல் திருப்பாப்புலியூர் ஞானியார் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞான சிவாச்சார்ய சுவாமிகளும் கோயம்புத்தூருக்கு வந்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டு அவர்களை இங்கு அழைத்து அவர்களைக் கொண்டே ஆரம்ப விழா நடத்திவிடலாம் என நினைத்து, கோயம்புத்தூர் சென்று அழைத்ததும், யாதொரு ஆக்ஷபணையும் சொல்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டு ஈரோட்டிற்கு வந்து, ஆரம்ப விழா நடத்திக் கொடுத்தார்கள். அது சமயம் பத்திரிகாலயத்தைத் திறந்து வைக்கும்படி ஞானியார் சுவாமிகளை கேட்டுக்கொண்ட போது, “அநேக பத்திரிகைகள் நமது நாட்டிடை இருந்தா லும் அவைகள் தங்கள் மனச்சாக்ஷிக்கு உண்மை என்று பட்டதை தெரிவிக்க அஞ்சுகின்றன. அதனால்தான் நான் இப்பத்திரிகை ஆரம்பிக்கிறேன். மற்றப் பத்திரிகை போலல்லாமல் மனதில் பட்டதைத் தைரியமாய் பொது ஜனங்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டுமென்பது எமது நோக்கம்” என்று சொல்லி இருக்கிறேன். ஞானியார் சுவாமிகளும் பத்திரிகாலயத்தைத் திறக்கும்போது, நமது நாட்டில் பல பத்திரிகை இருந்தும் இப்பத்திரிகை போன்ற கருத்துடைய பத்திரிகை வேறொன்றுமில்லை.

> **“உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்றெண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.” இன்னோறென்ன பிற நறுங்குணங்கள் நம் மக்கள் அடையப்பாடுபடுவது நமது நோக்கமாகும்.”**

“உயர்வு தாழ்வு என்கிற ஆணவம் மிகுந்திருக்கிறது.” “சமத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவ வேண்டும்.” “குடி அரசின்” கருத்து இதுவே என நான் அறிந்துகொண்டேன்.

“சமயத்திலிருக்கும் கேட்டை முதலில் ஒழிக்க வேண்டும்.” “இவை குடிஅரசின் முதல் கொள்கையாய் விளங்க வேண்டும்.” இப் பத்திரிகையில் ஸ்ரீமான் நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு” என்று ஆசிர்வதித்திருக்கிறார். முதல் இதழ் தலையங்கத்திலும் நமது நோக்கத்தை வெளியிட்ட தலையங்கத்திலும் நாம் குறிப்பிட்டிருப்பதாவது,

“ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும்”. “இதை அறவே விடுத்து வெறும் தேசம், தேசம் என்று கூக்குரல் இடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று.”

“மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்.”

“உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்றெண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.” இன்னோறென்ன பிற நறுங்குணங்கள் நம் மக்கள் அடையப்பாடுபடுவது நமது நோக்கமாகும்.”

“எவர் எனக்கு இனியர் இவர் எனக்கு இன்னார் என்ற விருப்பு வெறுப்பின்றி,”

“நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக் கண்மேச் சென்றிடித்தற் பொருட்டு” என்ற வாக்கைக் கடைபிடித்து நண்பரே யாயினுமாகுக. அவர்தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக் கப்படும்........” என்று எழுதி இருக்கிறோம். இவையாவும் 2-5-25 தேதி குடிஅரசில் காணலாம்.

அடுத்தபடி ஆறு மாதம் முடிந்த இதழில் ‘நமது பத்திரிகை’ என்னும் தலையங்கத்திலும்,

“குடி அரசு” குறிப்பிட்ட கருத்தைப் பிரசாரம் செய்யும் பத்திரிகையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலால் ......... பிரதி வாரமும் ‘குடி அரசு’ தனது ஆத்மாவை வெளிப்படுத்தும் (தத்துவத்தை விளக்கும்) போது கண்ணீர் கொட்டாமலிருக்க முடிவதே இல்லை. இதன் பலனால் உயர்ந்தோர் என்று சொல்லிக் கொள்வோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர் என்று சொல்வோராகிய பல ராஜ தந்திரிகளுக்கும் விரோதியாகவும் அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கும் நமது ‘குடி அரசு’ ஆளாக வேண்டியிருப்பதால் இது சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் பெற முடியாமலிருப்பது ஆச்சரியமல்ல என்றும்,

“உண்மையில் ‘குடிஅரசுக்கு’ எந்த பிராமணனிடத்தும் குரோதமோ வெறுப்போ கிடையாது. ஆனால் பிராமணன் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் என்பன போன்ற இழிவான மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார் தான் முன்னணியில் இருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு அதற்காகச் செய்யும் சூழ்ச்சிகளிடத்திலும் தான் குடிஅரசுக்குக் குரோதமும் வெறுப்பும் இருப்பதுடன், அதை அடியோடே களைந் தெறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்து வருகிறது” என்றும்,

“குடி அரசு” ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும், அதுவரை ஆயிரத்துச்சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள், அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை என்றும், பாமர ஜனங்கள் சரியானபடி குடி அரசை ஆதரிக்கவில்லையானால் அது தானாகவே மறைந்து போகவேண்டி யதுதான் அதன் கடமையே அல்லாமல் வியாபார தோரணையாய் நடந்து வராது” என்றும் எழுதியிருந்தது, (இதை 1-11-25 தேதி இதழிற் பார்க்கலாம்).

பிறகு ஒரு வருஷம் முடிந்து, இரண்டாவது வருஷ ஆரம்ப இதழில் “நமது பத்திரிகை” என்ற தலையங்கத்திலும், “இதுவரை நமக்குள்ள 2000 சந்தாதாரர் களில் நால்வர் அதிருப்திக்கே ஆளாகிறோம் என்று எழுதிவிட்டு, “குடி அரசு” எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ, நடைபெற வில்லை. யோக்கியமாய் உண்மையாய் நடக்கக் கூடிய காலம் வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால், அது தானே மறைந்து விடுமே யல்லாமல், மானங்கெட்டு விலங்குகளைப் போல் வாழாது, “குடிஅரசு” தோன்றிய பிறகு அது ராஜீய உலகத்திலும், சமூக உலகத்திலும், பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது, என்று பலர் நமக்கு எழுதியிருப்பதை நாமும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம், என்றும் எழுதி இருக்கிறோம்.

ஆகவே, இப்போது இரண்டு வருடங்கள் முடிந்து மூன்றாவது வருடம் ஆரம்ப இதழில் அதே தலையங்கத்துடன் ஒரு குறிப்பு எழுத ஆசைப்படு கிறோம். முதலாவதாக, ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்துகிறோம். அதாவது “குடிஅரசு”க்கு ஆறு மாதத்தில் ஆயிரம் சந்தாதாரர்களும், ஒரு வருஷத்தில் இரண்டாயிரம் சந்தாதாரர்களும் இப்போது இரண்டு வருஷத்தில் நாலாயிரத்து ஐந்நூறு சந்தாதாரர்களும் இருப்பதால் கூடுமான வரையில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று இருக்கிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# தேனி, திண்டுக்கல், திருச்சியிலும் கழகம் ஆர்ப்பாட்டம்!

## தேனி



தேனி மாவட்டக் கழக சார்பில் “மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்!” என்ற முழக்கத்துடன் “தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற, பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் தேனி இராயன் தலைமை தாங்கினார். திராவிட மகிழன் வரவேற்புரையாற்றினார். பெரியார் சிவா முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் விடுதலைக் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் தேனி தமிழரசி, விசிக மது, ஆதித்தமிழர் பேரவை நீலக்கனல், தமிழ்ப் புலிகள் தமிழரசு, ஆதித்தமிழர் கட்சி தீப்பொறி அரசு, திராவிடத் தமிழர் கட்சி இராமசாமி, பெண்கள் விடுதலைக் கழகம் சோலையம்மாள் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாகச் சந்திரன் நன்றி கூறினார்.

இதில் சூரி, சென்ராயன், சேதுராமு, வேலுச்சாமி, சின்னழகு, வசந்தா, காமு ஆகியோர் பங்கேற்றனர்.

## திண்டுக்கல்




“மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்!” என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற,பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் - கழக இளைஞரணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 10.09.2024 அன்று திண்டுக்கல் தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாக்சிம் கார்க்கி தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை யாழ் புலேந்திரன், ஞானசேகர், தந்தை பெரியார் திராவிடர் கழக ரமணா, தடா மதி, சமூக ஆர்வலர் பெரியார் மணி, ஆதித்தமிழர் பேரவை மாநில கொள்கை பரப்புச் செயலாளர் தலித் சுப்பிரமணி, மாவட்டச் செயலாளர் சுந்தரம், சமூகநீதிப் பேரவைத் தலைவர் சிவகுமார், சமநீதிப்புலிகள் கட்சி நிறுவனர் வெள்ளை பாண்டியன், தமிழர் சமூகநீதிக் கழகத் தலைவர் சுறா தங்கபாண்டியன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டத் தலைவர் அந்தோணி, மாநகரச் செயலாளர் தோழர் அலெக்ஸ், மருதநாயகம் கான்சாகிப் மக்கள் பேரியக்கத்தின் தோழர் தமிம் அன்சாரி, பழனிபாபா மாணவர் பேரியக்கம் ஹக்கீம் சேட், தலித் கூட்டமைப்பு கணேசன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தினை விளக்கி உரையாற்றினார்கள்.

நிறைவாகத் திண்டுக்கல் மாவட்டக் கழகத் தலைவர் மருதமூர்த்தி கண்டன உரையாற்றினார்.

மாவட்ட அமைப்பாளர் ராஜா நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக ஒட்டன்சத்திரம் ஒன்றியத் தலைவர் கபாலி, பழனி ஒன்றிய அமைப்பாளர் பெரியார், நத்தம் ஒன்றிய அமைப்பாளர் தங்கத்தமிழ்க் குமரன், நத்தம் சண்முகம், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் ஆயுதன், மாவட்ட இளைஞரணித் துணை அமைப்பாளர் சங்கர், ஒட்டன்சத்திரம் சுரேஷ், மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருச்சி



“மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்!” என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற, பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் - கழக இளைஞரணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 10.09.2024 அன்று திருச்சி இராமகிருஷ்ணா மேம்பால மரக்கடை அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் டார்வின் தாசன் வரவேற்புரையாற்றினார். திருவெறும்பூர் ஒன்றியப் பொறுப்பாளர் குணா கண்டன முழக்கங்களை எழுப்பினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அங்குசம் இதழ் பொறுப்பாசிரியர் முனைவர் தி. நெடுஞ்செழியன், ம.க.இ.க.பொதுச் செயலாளர் பாடகர் கோவன், ம.தி.மு.க.மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சாக்ரடீஸ், மக்கள் அதிகாரம் மாவட்டச் செயலாளர் செழியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வழக்குரைஞர் சந்துரு ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இதில் திருப்பூர் காட்டன் ஆறுமுகம், திருவரம்பூர் ஒன்றியப் பொறுப்பாளர் மணிகண்டன், ஷர்மிளா, திருவரங்க நகரச் செயலாளர் அசோக், மாவட்ட அமைப்பாளர் த.புதியவன், மக்கள் உரிமைக் கூட்டணி திருச்சி மண்டல செயலாளர் எஸ்.எம்.முகமது காசிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிறைவாகக் கழக மாவட்டச் செயலாளர் மனோகரன் நன்றி கூறினார்.

**(பிற மாவட்டங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

# காவல்துறையைக் கண்டித்துப் பொதுக்கூட்டம்



மேட்டூர் நகரக் கழக சார்பில் மேட்டூர் சரகக் காவல்துறையினரின் போக்கைக் கண்டித்துக் கண்டனப் பொதுக்கூட்டம் 04.09.2024 அன்று மேட்டூர் சதுரங்காடியில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு தலைமை வகித்தார். மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவின் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

இதில் சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் இரா.திருமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மேட்டூர் சரகக் காவல் துறையின் அடாவடிப் போக்கினைக் கண்டித்தும், தமிழ்நாடு முழுவதும் இருக்கும் காவல் நிலையங்களில் காவல்துறை அதிகாரிகளால் நடைபெறும் விதிமீறல்கள், லஞ்சம், போதை பொருள் விற்பனைக்கு ஆதரவு, எளிய மக்களிடம் மிரட்டி அடித்து பணம் பறித்தல் போன்ற விவரங்களைத் திரட்டி ஆதாரத்துடன் பொதுக்கூட்டத்தில் எடுத்துரைத்தார். மேலும் மேட்டூர் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் முதல் மேட்டூர் சரகச் சாதாரணக் காவலர் வரையில் உள்ளோர் சட்ட விரோதச் செயல்களை மீண்டும் தொடர்ந்தால் திராவிடர் விடுதலைக் கழகத்தினரை அணுகி தொலைபேசி எண்ணுக்கு அழைத்தோ, வாட்சப் எண்ணுக்கு எழுதியோ, குரல்பதிவு செய்தோ அல்லது நேரடியாகவோ தகவல் அளிக்குமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டு தனது உரையை நிறைவு செய்தார்.

இறுதியாக நன்றியுரை மேட்டூர் நகரச் செயலாளர் சு.குமரப்பா கூறக் கூட்டம் நிறைவு பெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 13, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran